[979 நவம்பர் 8]

வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

*** வினா எண். 79—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தை வட ஆற்காடு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

செல்வனூர் காட்டுப் பகுதியில் ஆட்டுப்பண்ணை.

*** வினா எண். 80—திரு. ஆர். சி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலாடி தொகுதி செல்வனூர் காடுகளில் உலக வங்கி உதவியோடு ஆட்டுப் பண்ணையமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆடுவளர்ப்புத் திட்டம் செயல்படுத்த ரூ. 47.50 கோடிக்கு திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் நிதியுதவி கோர மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இறுதியான பதில் மத்திய அரசினிடமிருந்து பெறப்படவில்;ல. அதில் உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில் 5,000 ஏக்கர் பரப்பில் அயலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதலும் ஒன்று. ஒப்புதல் பெறாத நிலையிலும் இடத்தேர்வுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்தாலோசிக்கப்பட்டனர். கடலாடி தொகுதி செல்வனூர் பகுதியிலும் நிலம் இருப்பதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிட்டுள்ளார். இடத்தேர்வு குறித்து கால் நடை பராமரிப்பு இயக்குநரின் கருத்து கோரப்பட்டுள்ளது..